# 049/2026-T

Question Booklet Alpha Code **A**

Question Booklet Serial Number

| | |
|---|---|
| Total No. of questions : 100 | Time : 1 Hour 30 Minutes |
| Maximum : 100 Marks | |

## INSTRUCTIONS TO CANDIDATES

1. The question paper will be given in the form of a Question Booklet. There will be four versions of question booklets with question booklet alpha code viz. A, B, C & D.
2. The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the question booklet.
3. The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.
4. If you get a question booklet where the alpha code does not match to the allotted alpha code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.
5. The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your question booklet is un-numbered, please get it replaced by new question booklet with same alpha code.
6. The question booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the question booklet, until the indication is given to start answering.
7. Immediately after the commencement of the examination, the candidate should check that the question booklet supplied to him contains all the 100 questions in serial order. The question booklet does not have unprinted or torn or missing pages and if so he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same alpha code. This is most important.
8. A blank sheet of paper is attached to the question booklet. This may be used for rough work.
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. Each question is provided with four choices (A), (B), (C) and (D) having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball-Point Pen in the OMR Answer Sheet.
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3 mark will be deducted. No negative mark for unattended questions.**
12. No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.
13. Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.

# 049/2026-T

Maximum : 100 marks

Time : 1 hour and 30 minutes

1. 1857-ல் முதல் சுதந்திர போராட்டத்தில் உத்தரப்பிரதேச பாரவுட் பர்கானாவில் கலவரத்தின் தலைமை வழங்கியது யார்?

   (A) ஷாமல் (B) பிர்ஜிஸ் காதர்
   (C) நானா சாஹிப் (D) இரண்டாம் பஹதூர்ஷா

2. பின் தேதி இட்ட செக் என்று காந்திஜி குறிப்பிட்டது எதை?

   (A) க்விட் இந்தியா போராட்டம் (B) சட்ட மீறல் இயக்கம்
   (C) கிரிப்ஸ் மிஷன் (D) கேபினட் மிஷன்

3. மலையாளத்தில் அச்சிடப்பட்ட முதல் புத்தகம் எது?

   (A) சம்க்ஷேப வேதார்த்தம் (B) அபிநவ கேரளம்
   (C) கேசரி (D) பிராசீன மலையாளம்

4. ஒத்துழையாமை இயக்கம் நிறுத்திவைக்க காந்திஜியை ஊக்கப்படுத்திய நிகழ்வு எது?

   (A) மாப்பிள் கலகம் (B) ஜாலியன் வாலாபாக் படுகொலை
   (C) காந்தி - இர்வின் ஒப்பந்தம் (D) சௌரி சௌர

5. 1897-ல் அமராவதியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டின் தலைவர் யார்?

   (A) எ.கே. கோபாலன் (B) சர்.சி. சங்கரன் நாயர்
   (C) காந்திஜி (D) கே.பி. கேசவமேனன்

6. 2025-ல் சிறந்த கால்பந்து வீரருக்கான ஃபிஃபா த பெஸ்ட் விருது பெற்ற வீரர் யார்?

   (A) ரொனால்டோ (B) உஸ்மான் டெம்பலே
   (C) லயனல் மெஸ்ஸி (D) ஹாலண்ட்

7. கீழ்க்கண்டவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.

I. காற்றுகள் குறைந்த காற்றழுத்த மண்டலத்திலிருந்து உயர் காற்றழுத்த மண்டலத்திற்கு வீசுகின்றன.

II. மிதவெப்பமண்டல உயர் காற்றழுத்த மண்டலம் 30° வடக்கு மற்றும் 30° தெற்கிற்கு இடையில் அமைந்துள்ளது.

III. துணைத்துருவ குறைந்த காற்றழுத்த மண்டலம் 60° வடக்கு மற்றும் 60° தெற்கிற்கு இடையில் அமைந்துள்ளது.

(A) I & II
(B) I & III
(C) II & III
(D) I, II & III

8. கீழே கொடுக்கப்பட்டுள்ள நதிகளின் சரியான துணை நதிகள் என்ன?

| வரிசை எண் | நதி | துணை நதி |
|---|---|---|
| I | சம்பல் | பனாஸ் |
| II | கிருஷ்ணா | இந்திராவதி |
| III | கோதாவரி | கொய்ன |
| IV | காவேரி | கபனி |

(A) I & II
(B) I & III
(C) I & IV
(D) II & III

9. ஒரு வினாடி நேரத்தில் ஒரு குறிப்பிட்ட இடம் கடந்து செல்லும் அலைகளின் எண்ணிக்கை?

(A) அலை அதிர்வெண்
(B) அலைக்காலம்
(C) அலைநீளம்
(D) அலைவீச்சு

10. கீழ்க்கண்டவற்றுள் தீபகற்ப பீடபூமியுடன் தொடர்புடைய சரியான கூற்றுகள் எவை?

I. தீபகற்ப பீடபூமியின் சரிவு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி குறைகிறது.

II. ஷில்லாங் பீடபூமி, தீபகற்ப பீடபூமியின் வடகிழக்கு தொடர்ச்சியாகும்.

III. தீபகற்ப பீடபூமியின் மேற்கு எல்லை கிர் மலைத்தொடர் ஆகும்.

(A) I & II சரி
(B) I மட்டும் சரி
(C) II மட்டும் சரி
(D) I, II & III சரிதான்

11. கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றுகளை தேர்ந்தெடுக்கவும்

I. வயநாடு மாவட்டம் 1981 நவம்பர் 1 அன்று உருவாக்கப்பட்டது.

II. வயநாடு மாவட்டத்தில் மூன்று தாலூக்காக்கள் உள்ளன.

III. வயநாடு பீடபூமியின் உயரம் 700 மீட்டர் முதல் 2100 மீட்டர் வரை உள்ளது.

(A) I & II
(B) I & III
(C) II & III
(D) I, II & III

12. 2050ல் கேரளாவை கார்பன் நியூட்ரல் மாநிலமாக்குவதற்கான திட்டமான அங்கஞ்ஜோதி திட்டம் பைலட் அடிப்படையில் செயல்படுத்தப்பட்ட ஒரு தொகுதி?

(A) சித்தூர்
(B) மண்ணார்க்காடு
(C) வட்டியூர்க்காவு
(D) கொயிலாண்டி

13. கலப்புப் பொருளாதாரம் என்பதன் பொருள் என்ன?

(A) நவீன மற்றும் பாரம்பரிய தொழில்கள்
(B) பொது துறையும் தனியார் துறையும்
(C) பேரியல் பொருளாதாரம் மற்றும் நுண்ணியல் பொருளாதாரம்
(D) இவை எதுவும் இல்லை

14. பின்வருவனவற்றில் பசுமைப் புரட்சியின் கூறுகள் யாவை?

(a) அதிக மகசூல் தரும் விதைகள்

(b) நீர்ப்பாசனம்

(c) இரசாயன உரங்களைப் பயன்படுத்துதல்

(A) a, b
(B) a, c
(C) b, c
(D) எல்லாம்

15. இந்திய அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ள 'ஐந்தாண்டுத் திட்டங்கள்' எனும் கோட்பாடு எந்த நாட்டிலிருந்து பெறப்பட்டது?

(A) ரஷ்யா
(B) இங்கிலாந்து
(C) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
(D) ஜெர்மனி

16. இந்திய மக்கள் தொகையில் 70% பேர் ஈடுபட்டுள்ள துறை எது?

(A) பொதுத்துறை
(B) முதன்மைத் துறை
(C) இரண்டாம் துறை
(D) மூன்றாம் துறை

**17.** பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியின் அளவுகோலாக அமைவது எது?

(A) GDP
(B) NNP
(C) தனி நபர் வருமானம்
(D) GNP

**18.** பின்வரும் வரிகளில் எதனை மத்திய அரசு வசூலிப்பதில்லை?

(A) வருமான வரி
(B) சுங்க வரி
(C) கலால் வரி
(D) தொழிலாளர் வரி

**19.** "தேவை, அளிப்பை உருவாக்குகிறது" என்று கூறியவர் யார்?

(A) J.B. சே
(B) J.S. மில்
(C) J.M. கீன்ஸ்
(D) ஆடம் ஸ்மித்

**20.** காலவரிசைப்படி வரிசைப்படுத்துக (இந்தியக் குடியரசுத் தலைவர்கள்)

A. ஜாகிர் உசேன்

B. சர்வபள்ளி ராதாகிருஷ்ணன்

C. ராஜேந்திர பிரசாத்

D. வி.வி. கிரி

(A) C, B, D, A
(B) C, B, A, D
(C) B, C, A, D
(D) C, D, B, A

**21.** பின்வருவனவற்றை இணைக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒரு உறுப்பினரின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் | A. | மாநிலங்களின் அவை |
| 2. | நிதி மசோதா முதலில் அறிமுகப்படுத்தப்படும் அவை | B. | ராஜ்ய சபா |
| 3. | ராஜ்ய சபா | C. | லோக் சபா |
| 4. | லோக் சபா | D. | மக்களவை |

(A) 1-C, 2-B, 3-D, 4-A
(B) 1-B, 2-A, 3-D, 4-C
(C) 1-B, 2-C, 3-D, 4-A
(D) 1-B, 2-C, 3-A, 4-D

**22.** இந்தியக் குடியரசுத் தலைவருக்குத் தேவைப்படும் தகுதிகள் குறித்து அரசியலமைப்பின் எந்த வகுப்பு குறிப்பிடுகிறது?

(A) வகுப்பு 58
(B) வகுப்பு 61
(C) வகுப்பு 368
(D) வகுப்பு 52

**23.** இந்தியாவில் ஒரு சுதந்திரமான மற்றும் நடுநிலையான நீதித்துறையை உறுதி செய்வதற்கான அரசியலமைப்பு விதிகள் அல்லாதது பின்வருவனவற்றுள் எது? அவை எவை?

1. நீதிபதிகள் தகுதியின் அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும்.
2. நீதிபதிகளுக்குப் போதுமான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
3. நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டும்.
4. நீதிபதிகளின் பதவிக்காலம் உறுதி செய்யப்பட வேண்டும்.

(A) 2 மற்றும் 3 (B) 3 மற்றும் 4
(C) 3 மட்டும் (D) 2 மட்டும்

**24.** ஏப்ரல் 2025-இல் நடைபெற்ற பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு இந்தியாவின் பதிலடியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கு 'ஆபரேஷன் சிந்தூர்' (Operation Sindoor) என்ற பெயரைப் பரிந்துரைத்தவர் யார்?

(A) திரௌபதி முர்மு (B) ராஜ்நாத் சிங்
(C) ஜெனரல் அனில் சௌஹான் (D) இவர்களில் யாரும் இல்லை

**25.** பின்வருவனவற்றை இணைக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| A. | 91-வது அரசியலமைப்புத் திருத்தம் | 1. | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அரசியலமைப்பாக்கப்பட்டன |
| B. | 74- வது அரசியலமைப்புத் திருத்தம் | 2. | கல்வியை ஒரு அடிப்படை உரிமையாக்கியது |
| C. | 86- வது அரசியலமைப்புத் திருத்தம் | 3. | அமைச்சர்களின் எண்ணிக்கை மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 15%-க்கு மிகாமல் இருக்க வேண்டும் |
| D. | 42- வது அரசியலமைப்புத் திருத்தம் | 4. | மக்களவையின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாக மாற்றப்பட்டது |

(A) A-2, B-1, C-4, D-3 (B) A-3, B-1, C-2, D-4
(C) A-3, B-2, C-4, D-1 (D) A-2, B-3, C-4, D-1

**26.** பின்வருபவர்களில் இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் யார்?

(A) அஜித் தோவல் (B) மனோஜ் சின்ஹா
(C) அமித் ஷா (D) பிரஜேஷ் மிஸ்ரா

27. மாநிலத் தேர்தல் ஆணையம் குறித்துப் பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை?

(i) அரசியலமைப்பின் வகுப்பு 243(k) மாநிலத் தேர்தல் ஆணையம் பற்றிக் குறிப்பிடுகிறது.

(ii) மாநிலச் சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை மாநிலத் தேர்தல் ஆணையம் மேற்பார்வையிடுகிறது.

(iii) ஒரு மாநிலத் தேர்தல் ஆணையரை, உயர் நீதிமன்ற நீதிபதியை நீக்குவதற்கு வகுக்கப்பட்டுள்ள அடிப்படைகள் மற்றும் நடைமுறைகளின்படியே அன்றி, அவரது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பாகப் பதவியிலிருந்து நீக்க இயலாது.

(A) (i, ii) மட்டும் சரியானது
(B) (iii) மட்டும் சரியானது
(C) (i, iii) மட்டும் சரியானது
(D) (ii) மட்டும் சரியானது

28. கேரள மாநில எழுத்தறிவு இயக்க ஆணையம் (Kerala State Literacy Mission Authority) குறித்த பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை?

(i) கேரள எழுத்தறிவு இயக்க ஆணையம் என்பது கேரள அரசின் பொதுக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.

(ii) மாநிலத்தில் எழுத்தறிவு மற்றும் உயர்கல்விச் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும், அவற்றைச் செயல்வடிவம் பெறச் செய்யவும் இது உருவாக்கப்பட்டது.

(iii) கேரள எழுத்தறிவு இயக்க ஆணையத்தின் தலைவர் கல்வி அமைச்சர் ஆவார்.

(A) (i) மட்டும் சரியானது
(B) (ii, iii) மட்டும் சரியானது
(C) (iii) மட்டும் சரியானது
(D) (i, ii) மட்டும் சரியானது

29. மாநில நிதி ஆணையம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை?

(i) மாநில நிதி ஆணையம், மாநில ஆளுநரால் நியமிக்கப்படுகிறது.

(ii) உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை ஆய்வு செய்து பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கும் அதிகாரம் மாநில நிதி ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது

(iii) இதுவரை கேரளாவில் ஏழு நிதி ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன

(A) (i, ii) மட்டும் சரியானவை
(B) (iii) மட்டும் சரியானவை
(C) (ii, iii) மட்டும் சரியானவை
(D) அனைத்துக் கூற்றுகளும் சரியானவை

30. கேரள மாநில ஈரநிலப் பாதுகாப்பு ஆணையம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது/எவை தவறானவை?

(i) இது கேரள மாநில நெல் வயல் ஈரநிலப் பாதுகாப்புச் சட்டம், 2008-இன் கீழ் நிறுவப்பட்டது

(ii) கேரள மாநில ஈரநிலப் பாதுகாப்பு ஆணையத்தின் துணைத் தலைவர், மாநில சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் ஆவார்.

(iii) சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் இயக்குநர், ஆணையத்தின் உறுப்பினர் செயலாளராகச் செயல்படுகிறார்.

(A) (i) மட்டும் தவறானது
(B) (i, iii) மட்டும் தவறானது
(C) (i, ii) மட்டும் தவறானது
(D) (ii, iii) மட்டும் தவறானது

31. மாநிலப் பொதுச் சேவை ஆணையம் தொடர்பாகக் கீழ்க்கண்டவற்றில் எது/எவை தவறானவை?

(i) மாநிலப் பொதுச் சேவை ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் மாநில ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்கள்

(ii) மாநிலப் பொதுச் சேவை ஆணையத்தின் ஓர் உறுப்பினர் ஆறு ஆண்டுகள் அல்லது 65 வயது வரை பதவியில் நீடிக்கலாம்.

(iii) மாநிலப் பொதுச் சேவை ஆணையத்தின் உறுப்பினர் ஒருவர், ஆளுநரின் உத்தரவின் மூலம் அவரது பதவிக்காலம் முடிவதற்கு முன்பே பதவியிலிருந்து நீக்கப்படலாம் என்று அரசியலமைப்புச் சட்டம் வழங்குகிறது.

(A) (ii, iii) மட்டும் தவறானவை
(B) (i, iii) மட்டும் தவறானவை
(C) (i, ii) மட்டும் தவறானவை
(D) (i) மட்டும் தவறானது

32. முதியோர் பராமரிப்பு தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை?

(i) கேரள சட்டமன்றம், நாட்டில் முதியோர் நலனுக்காக முதல் ஆணையத்தை அமைப்பதற்கான கேரள முதியோர் ஆணைய மசோதாவை நிறைவேற்றியுள்ளது.

(ii) 'வயோமித்ரம்' என்பது நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட முதியவர்களுக்கு இலவச குளுக்கோமீட்டர்களை வழங்கும் நோக்கில் கேரள சமூகப் பாதுகாப்பு இயக்கத்தால் செயல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும்.

(iii) சமூக நீதித் துறை, 'மந்தஹாசம்' திட்டத்தின் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள முதியவர்களுக்கு முழுமையான செயற்கைப் பல் தொகுப்புகளை இலவசமாக வழங்க இலக்கு கொண்டுள்ளது.

(A) (i, iii) மட்டும் சரியானவை
(B) (ii, iv) மட்டும் சரியானவை
(C) (ii) மட்டும் சரியானது
(D) (i) மட்டும் சரியானது

33. கேரள அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை?

(i) 'தீப்தி' என்பது, பார்வைக் குறைபாடுகளை எதிர்கொள்ளும் அனைத்து வகை எழுத்தறிவற்ற மக்களுக்கும் பிரெய்ல் எழுத்தறிவை வழங்குவதற்காக, மாநில எழுத்தறிவு இயக்கத்தால் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து செயல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும்.

(ii) 'நவஜீவன்' என்பது, குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்காக கேரள சமூக நீதித் துறையால் செயல்படுத்தப்படும் ஒரு சுயதொழில் மறுவாழ்வுத் திட்டமாகும்.

(iii) சமூக நீதித் துறையால் செயல்படுத்தப்படும் 'பரி ரக்ஷா' திட்டத்தின் நோக்கம், 50 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற விதவைகளுக்குப் பாதுகாப்பையும் சிறந்த வாழ்க்கை நிலைமைகளையும் உறுதி செய்வதாகும்.

(A) (iii) மட்டும் சரியானது
(B) (i) மட்டும் சரியானது
(C) (ii, iii) மட்டும் சரியானது
(D) (ii) மட்டும் சரியானது

34. கேரளாவின் முதல் தேசியப் பூங்கா எது?

(A) பெரியார்
(B) இரவிக்குளம்
(C) சைலண்ட் வேலி
(D) மதிகெட்டான் சோலை

35. செல்லைக் கண்டுபிடித்தவர் யார்?

(A) ராபர்ட் ஹூக்
(B) ராபர்ட் ஃப்ரோஸ்ட்
(C) ஷ்லைடன்
(D) ஷ்வான்

36. பழ ஈக்கள் என்று அழைக்கப்படுவது எது?

(A) மஸ்கா
(B) ட்ரோசோஃபிலா
(C) டோக்ஸோபிளாஸ்மா
(D) சிஸ்டோசோமா

37. மனித உடலில் உள்ள மிகச்சிறிய எலும்பு எது?

(A) டிபியா
(B) ஸ்டேப்ஸ்
(C) ஸ்கேபுலா
(D) கிளாவிக்கிள்

38. உலக நீரிழிவு தினம் அனுசரிக்கப்படும் நாள்

(A) நவம்பர் 14
(B) நவம்பர் 15
(C) ஜூலை 11
(D) டிசம்பர் 20

39. எலுமிச்சை, நெல்லிக்காய் போன்றவற்றில் காணப்படும் வைட்டமின் எது?

(A) வைட்டமின் – A
(B) வைட்டமின் – $B_6$
(C) வைட்டமின் – C
(D) வைட்டமின் – D

40. சமீபத்தில் கேரளாவில் காலமான கென்யாவின் முன்னாள் பிரதமர்

(A) ரெய்லா ஒடிங்கா
(B) கெய்ர் ஸ்டார்மர்
(C) வில்லியம் கிப் சிர்சிர்
(D) ரிஷி சுனக்

41. அடுத்த உலகக் கோப்பை எந்த ஆண்டில் நடைபெறும்?

(A) 2027
(B) 2028
(C) 2026
(D) 2029

42. ஒரு பழத்தில் உள்ள ஆற்றலின் அளவு தோராயமாக 840 KJ ஆகும். இது எத்தனை கலோரிகளுக்குச் சமமாக இருக்கும்?

(A) 3528 KCal
(B) 200 Cal
(C) 200 KCal
(D) 3528 Cal

43. 20 செ.மீ குவிய நீளம் கொண்ட ஒரு குழி லென்ஸின் திறன் என்ன?

(A) 0.05 D
(B) – 5 D
(C) – 0.05 D
(D) 5 D

44. பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(i) ஒலியும் ஒளியும் மின்காந்த அலைகள் ஆகும்.

(ii) ஒலி ஒரு நெட்டலை மற்றும் ஒளி ஒரு குறுக்கலை ஆகும்.

(iii) ஒளி ஒரு நெட்டலை மற்றும் ஒலி ஒரு குறுக்கலை ஆகும்.

(iv) ஒளி ஒரு மின்காந்த அலை ஆகும்.

(A) (i) & (iii)
(B) (ii) & (iv)
(C) (iii) & (iv)
(D) (i) & (ii)

45. பின்வருவனவற்றிலிருந்து சரியான கூற்றைக் கண்டறியவும்

(i) புதிய பாம்பன் பாலம் 2025 ஏப்ரல் 6 அன்று பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்பட்டது.

(ii) புதிய பாம்பன் பாலம் இந்தியாவின் முதல் செங்குத்து தூக்கு கடல் பாலம் ஆகும்.

(iii) இதன் நீளம் 2.07 கி.மீ.

(A) (i) & (ii) மட்டும் சரியானவை
(B) அனைத்து கூற்றுகளும் சரியானவை
(C) (ii) & (iii) மட்டும் சரியானவை
(D) (i) மட்டும் சரியானது

46. 2026-ல் பிரிக்ஸ் உச்சிமாநாட்டை எந்த நாடு நடத்தும்?

(A) பிரேசில்
(B) ரஷ்யா
(C) இந்தியா
(D) சீனா

47. திட்ட வெப்பநிலை மற்றும் அழுத்தத்தில் (STP) ஒரு மோல் ஹைட்ரஜனின் கன அளவு

(A) 11.2 லிட்டர்
(B) 224 லிட்டர்
(C) 22.4 லிட்டர்
(D) 112 லிட்டர்

48. போலி-இடைநிலைத் தனிமம்

(A) தாமிரம்
(B) இரும்பு
(C) வெள்ளி
(D) துத்தநாகம்

49. கலமைன் எந்த உலோகத்தின் தாது?

(A) துத்தநாகம்
(B) தாமிரம்
(C) இரும்பு
(D) தங்கம்

50. உலக வானிலை தினம்

(A) பிப்ரவரி 23
(B) மார்ச் 23
(C) மார்ச் 22
(D) பிப்ரவரி 22

51. சிவசக்தி முனையில் சந்திரயான்-3 வெற்றிகரமாக மென்மையாகத் தரையிறங்கிய தேதி?

(A) ஜூலை 14, 2023
(B) ஆகஸ்ட் 15, 2023
(C) ஆகஸ்ட் 23, 2023
(D) செப்டம்பர் 7, 2019

52. 'சின்னதம்பி அண்ணாவி' எந்தக் கலைவடிவம் தொடர்பாக புகழ் பெற்றார்?

(A) சவிட்டுநாடகம்
(B) தெக்கன்பாட்டு
(C) பூரக்களி
(D) வேலகளி

53. ஒலிம்பிக்கில் பங்கேற்ற முதல் மலையாளி யார்?

(A) பி.டி. உஷா
(B) நோரா பாலி
(C) ஷைனி வில்சன்
(D) சி.கே. லக்ஷ்மன்

54. எந்த மலையாள நாவலில் 'அப்புக்கிளி' என்ற பாத்திரம் வருகிறது?

(A) புள்ளியன்
(B) ஆத்ரேயகம்
(C) அனர்கநிமிஷம்
(D) கசாக்கின்டெ இதிஹாசம்

55. சபரிமலை கோவில் எந்த மாவட்டத்தில் உள்ளது?

(A) கொல்லம்
(B) இடுக்கி
(C) பத்தனம்திட்டா
(D) கோட்டயம்

**56.** 2025ல் கேரளாவின் இந்திய திரைப்பட விழாவில் சிறந்த பிரபலமான திரைப்படத்திற்கான பார்வையாளர்கள் கருத்துக்கணிப்பு விருதை வென்ற படம் எது?

(A) உடலாழம்
(B) தந்தப்பேரு
(C) பிரமயுகம்
(D) ஃபெமினிச்சி ஃபாத்திமா

**57.** மச்சாட்டிளயது எந்த இலக்கிய வகைகளில் பிரபலமானது?

(A) வடக்கன்பாட்டு
(B) திருவாதிரைப்பாட்டு
(C) வஞ்சிப்பாட்டு
(D) கிளிப்பாட்டு

**58.** சேரமான் ஜும்மா மசூதி எந்த இடத்தில் உள்ளது?

(A) பொன்னானி
(B) கொடுங்கல்லூர்
(C) திரூர்
(D) மட்டாஞ்சேரி

**59.** 1 KB = _________

(A) 1000 பிட்கள்
(B) 1024 பிட்கள்
(C) 1000 பைட்டுகள்
(D) 1024 பைட்டுகள்

**60.** பின்வருவனவற்றில் எது ஒரு திறந்த மூல மென்பொருள்?

(A) எம்.எஸ். ஆபிஸ்
(B) அடோப் போட்டோஷாப்
(C) மொஸில்லா ஃபயர்ஃபாக்ஸ்
(D) ஸ்கைப்

**61.** எந்த இந்தியச் சட்டம் இணையக் குற்றங்களைக் கையாள்கிறது?

(A) தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000 (திருத்தப்பட்டது 2008)
(B) டிஜிட்டல் பாதுகாப்புச் சட்டம் 2015
(C) இணையக் குற்றப் பாதுகாப்புச் சட்டம் 2012
(D) தகவல் தனியுரிமைச் சட்டம் 2005

**62.** WWW-ஐக் கண்டுபிடித்தவர் யார்?

(A) லாரி பேஜ்
(B) வின்ட் சர்ஃப்
(C) டிம் பெர்னர்ஸ்-லீ
(D) ஸ்டீவ் ஜாப்ஸ்

**63.** ஒரு கணினிக்கும் கைபேசிக்கும் இடையேயான புளூடூத் இணைப்பு எந்த வகையான நெட்வொர்க்கிற்கு ஒரு எடுத்துக்காட்டு?

(A) LAN
(B) PAN
(C) WAN
(D) MAN

64. 2025-ல் கேந்திர சாகித்ய அகாடமி யுவ புரஸ்கார் (மலையாளம்) விருதை வென்றவர் யார்?

(A) அனில் பி தர்மஜன்
(B) அகில் பி தர்மஜன்
(C) பிரசாத் சூரி
(D) ஸ்ரீஜித் மூத்தேடத்து

65. 2025-ல் இந்தியாவின் ஐம்பத்திரண்டாவது தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்றவர் யார்?

(A) நீதிபதி சஞ்சீவ் கண்ணா
(B) நீதிபதி என்.வி. ரமணா
(C) நீதிபதி டி.ஒய். சந்திரசூட்
(D) நீதிபதி பி.ஆர். கவாய்

66. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-இன் பிரிவு 8-இன் கீழ், பின்வரும் எந்த வகையான தகவலை வெளியிடக்கூடாது?

(A) இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டைப் பாதிக்கும் தகவல்
(B) ஊழல் தொடர்பான தகவல்
(C) பொது நலன் சார்ந்த தகவல்
(D) இவை அனைத்தும்

67. போக்சோ சட்டம், 2012-இன் பிரிவு 10-இன் கீழ், கொடூரமான பாலியல் வன்கொடுமைக்கான குறைந்தபட்ச சிறைத்தண்டனை என்ன?

(A) மூன்று ஆண்டுகள்
(B) ஏழு ஆண்டுகள்
(C) ஐந்து ஆண்டுகள்
(D) பத்து ஆண்டுகள்

68. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019-இன் பிரிவு 34-இன் கீழ், ரூ. 1 கோடி வரையிலான மதிப்புள்ள பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான புகார்களை எங்கு தாக்கல் செய்ய வேண்டும்?

(A) தேசிய ஆணையம்
(B) மாநில ஆணையம்
(C) மாவட்ட ஆணையம்
(D) உயர் நீதிமன்றம்

69. குடும்ப வன்முறைச் சட்டம், 2005-இன் பிரிவு 18-இன் கீழ், யார் பாதுகாப்பு உத்தரவைப் பிறப்பிக்க முடியும்?

(A) காவல் அதிகாரி
(B) நீதிபதி
(C) காவல் நிலைய அதிகாரி
(D) எந்தவொரு நீதிபதியும்

70. பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989-இன் பிரிவு 3-இன் கீழ் வன்கொடுமைக் குற்றத்தைச் செய்ததற்காக யார் தண்டிக்கப்படலாம்?

(A) எந்தவொரு நபரும்
(B) ஒரு பட்டியல் சாதியைச் சேர்ந்தவர் மட்டும்
(C) பட்டியல் சாதி அல்லது பழங்குடியினத்தைச் சேர்ந்த எவரும்
(D) பட்டியல் சாதி அல்லது பழங்குடியினத்தைச் சாராத எவரும்

71. மதிப்பைக் காண்க :

$5 + 4 \times 5 + 4 \times 5^2 + 4 \times 5^3 + 4 \times 5^4 + 4 \times 5^5$

(A) $5^4$ (B) 1250

(C) $5^6$ (D) $5^7$

72. ஒரு கண்ணாடியில் கடிகாரத்தின் பிம்பம் 11:15 எனில், உண்மையான நேரம் என்ன?

(A) 10:30 (B) 12:45

(C) 9:45 (D) 2:35

73. ஜூலை 8, 2025 செவ்வாய்க்கிழமை எனில், 95 நாட்கள் கழித்து என்ன நாளாக இருக்கும்?

(A) சனிக்கிழமை (B) புதன்கிழமை

(C) வியாழக்கிழமை (D) ஞாயிற்றுக்கிழமை

74. 0, 26, 124, 342, 728.......... என்ற தொடரின் அடுத்த உறுப்பு எது?

(A) 1225 (B) 1430

(C) 1020 (D) 1330

75. ஒரு வகுப்பில் உள்ள குழந்தைகள் வரிசையாக நிற்கிறார்கள். அந்த வரிசையில் 50 குழந்தைகள் உள்ளனர். அனு முன்னிருந்து 10வது இடத்திலும், வினு பின்னிருந்து 34வது இடத்திலும் உள்ளனர். அவர்களுக்கு இடையில் எத்தனை குழந்தைகள் உள்ளனர்?

(A) 12 (B) 4

(C) 6 (D) 24

76. A மற்றும் B இருவரும் சேர்ந்து ஒரு வேலையை முடிக்க 30 நாட்கள் எடுத்துக்கொள்கிறார்கள். A, B-ஐ விட 3 மடங்கு கடினமாக உழைக்கிறார். எனில், A மட்டும் தனியாக அந்த வேலையை முடிக்க எத்தனை நாட்கள் ஆகும்?

(A) 40 (B) 16

(C) 10 (D) 20

77. ஒரு சதுரத்தின் மூலைவிட்டம் பக்கமாக வரையப்படும் சதுரத்தின் பரப்பளவு 1352 சதுர சென்டிமீட்டர் எனில், முதல் சதுரத்தின் ஒரு பக்கத்தின் நீளம் என்ன?

(A) 10 (B) 30

(C) 16 (D) 26

78. 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில், A 45 வினாடிகளிலும், B 50 வினாடிகளிலும் தூரத்தைக் கடப்பார்கள். இந்த ஓட்டப்பந்தயத்தில் A, B-ஐ எத்தனை வினாடிகள் வித்தியாசத்தில் வெல்வார்?

(A) 10 (B) 15

(C) 5 (D) 20

79. ஒருவர் 3 புத்தகங்கள் வாங்கியபோது, அவருக்கு 1 புத்தகம் இலவசமாகக் கிடைத்தது. எனில், தள்ளுபடி சதவீதம் என்ன?

(A) 25% (B) 12%

(C) 30% (D) 10%

80. $(10^3 - 7^3) \div (10^2 + 70 + 7^2) = ?$

(A) 7 (B) 3

(C) 27 (D) 10

81. Choose the correct preposition given in brackets.
He searched _________ the ring everywhere.
(A) for (B) of
(C) to (D) in

82. Choose the correct tense form of the verb given in brackets.
Our school team ___________ the cricket match last year.
(A) had won (B) wins
(C) win (D) won

83. The children are playing, ___________?
(A) don't they? (B) aren't they?
(C) do they? (D) weren't they?

84. Choose the correct passive form of the sentence given below :
People will support us.
(A) They would be supported by the people.
(B) We will be supported by the people.
(C) They will be supported by the people.
(D) He will be supported by the people.

85. If she had taken a car, she ___________ the station in time.
(A) would have reached (B) would reach
(C) had reached (D) will reach

86. Choose the correct antonym of the word 'rigid'.
(A) Gratify (B) Flexible
(C) Comfort (D) Consent

87. Choose the correct phrasal verb to complete the sentence.
My sister tries to ___________ some money every month.
(A) set on (B) set off
(C) set aside (D) set up

88. Choose the correct synonym of the word 'Frivolous'.
(A) harsh (B) arduous
(C) irritable (D) silly

89. The masculine gender of 'Witch' is ___________.
(A) Priest (B) Wizard
(C) Drake (D) Stallion

90. Choose the correct one-word substitute for : 'One talking a lot'.
(A) Omniscient (B) Loquacious
(C) Optimist (D) Philatelist

**91.** மிகச்சரியான சொல்லைத் தேர்வு செய்க.

கீழ்வரும் சொற்களில் பழமொழியைக் குறிக்கும் சொல் எது?

(A) கதையாடல்
(B) பிசி
(C) சொலவடை
(D) அங்கதம்

**92.** சரியான வாக்கிய அமைப்பினைத் தேர்ந்தெடுக்க.

(A) சூர்ப்பனகை இராவணனின் தங்கை ஆவாள்
(B) இராவணன் தங்கை சூர்ப்பனகை ஆகும்
(C) இராவணனை சூர்ப்பனகை தங்கை ஆவாள்
(D) தங்கை இராவணன் சூர்ப்பனகை ஆவாள்

**93.** "Car" என்ற ஆங்கிலச் சொல்லிற்கு நிகரான தமிழ்ச் சொல் எது?

(A) சரக்குந்து
(B) பேருந்து
(C) சிற்றுந்து
(D) மகிழுந்து

**94.** சேர்த்து எழுதுக.

பசுமை + இலை = ___________

(A) பசுமையிலை
(B) பாசிலை
(C) பசிய இலை
(D) பசுமையின் இலை

**95.** பிரித்து எழுதுக.

மரக்கிளை = ___________

(A) மரம் + கிளை
(B) மரக் + கிளை
(C) மரக்கு + இளை
(D) மர + கிளை

**96.** கீழ்க்காணும் சொற்களில் வினைச்சொல் வடிவம் எது?

(A) எழுத்து

(B) மருந்து

(C) காண்

(D) வான்

**97.** கீழ் வரும் தொடர்களை பொருத்தமாக இணைத்தெழுதுக.

கபிலர் நண்பனாவார். பாரி நண்பானாவான்

(A) கபிலரோ பாரியோ நண்பனாவான்

(B) கபிலரும் பாரியும் நண்பர்களாவர்

(C) கபிலர் பாரி நண்பனாவான்

(D) கபிலர் நண்பன் பாரி நண்பன்

**98.** சரியான சொல்லினைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

"முது நெல்லிக்காய் முன்னே கசக்கும் பின்னே __________"

(A) எரியும்

(B) புளிக்கும்

(C) துவர்க்கும்

(D) இனிக்கும்

**99.** கீழ்க்காணும் சொற்களில் பெண்பாலிற்குரிய சொல் எது என்று குறிப்பிடுக.

(A) காளை

(B) கடுவன்

(C) பெடை

(D) விடை

**100.** "வளி" என்ற சொல் எதைக் குறிக்கின்றது?

(A) காற்று

(B) நாற்று

(C) அருவி

(D) குருவி

**SPACE FOR ROUGH WORK**

**SPACE FOR ROUGH WORK**